புதிய மாவட்ட கல்வி அலுவலர்கள் செயல்பட அனுமதி வழங்கப்பட்டது – தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுதல் பள்ளிக்கல்வி இயக்குநர் செயல்முறைகள்

ந.க.எண்.101/இ.இ.(ப.தொ.)/ நே.மு.உ./2018 நாள்.29.05.2018

பொருள் பள்ளிக் கல்வி –நிர்வாக சீரமைப்பு –புதிய மாவட்ட கல்வி அலுவலர்கள் செயல்பட அனுமதி வழங்கப்பட்டது – தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுதல் சார்பு

பார்வை 1) அரசாணை எண் 101 பள்ளிக்கல்வி (வரவு செலவு)த் துறை நாள் 18.05.2018

2) அரசாணை எண் 108 பள்ளிக்கல்வி (ப.க.4(1))த் துறை நாள் 28.05.2018

3) சென்னை–6 பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.84056/அ1/இ1/2018 நாள்.28.05.2018

பார்வை (1) ல் காணும் அரசாணையில் பள்ளிக் கல்வித்துறையின் கீழ் இயங்கும் அனைத்து பள்ளிகளையும் திறம்பட ஆய்வு செய்யவும், அரசின் நலத்திட்டங்களை அனைத்து மாணவ /மாணவியர்களுக்கும் கொண்டு சேர்க்கவும், ஆசிரியர்களின் குறைகளை உடனுக்குடன் தீர்க்கவும் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட கல்வி அலுவலர் மற்றும் அதனையொத்த அனைத்து பணியிடங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு மாவட்ட கல்வி அலுவலர் என்ற பெயரில் செயல்பட ஆணைகள் வெளியிடப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக பார்வை (2) ல் காணும் அரசாணையில் புதியதாக அமைய உள்ள 52 மாவட்ட கல்வி அலுவலர்கள் உரிய இடங்களில் செயல்பட அனுமதியும், பழைய அலுவலகங்களில் அனுமதிக்கப்பட்ட அனைத்து பணியிடங்களையும் புதிதாக அமைய உள்ள மாவட்ட கல்வி அலுவலர் பணி நிரவல் மூலம் மாற்றம் செய்திட அனுமதியும் அரசால் வழங்கப்பட்டது.

இதனை செயல்படுத்தும் விதமாக, புதியதாக உருவாக்கப்பட்டுள்ள மாவட்ட கல்வி அலுவலகத்திற்கும், அதன் வரையறுக்கப்பட்ட ஒன்றியங்கள், பள்ளிகள் மற்றும் பணிபளுவினை கருத்தில் கொண்டு கீழ்கண்டவாறு பணியிடங்கள் நிர்ணயம் செய்து ஆணையிடப்படுகிறது அனைத்து மாவட்ட கல்வி அலுவலர்களும் ஒரே சீரான எண்ணிக்கையின் அடிப்படையில் பணியாளர்களை கொண்டு நிர்வகிக்கும் வகையில இந்நிர்ணயம் மேற்கொள்ளப்படுகிறது.

மாவட்ட கல்வி அலுவலகம்

1. ஏற்கனவே செயல்பட்டு வரும் மாவட்ட கல்வி அலுவலர்கள் தற்போது உள்ள பணியிடங்கள் மற்றும் பணியாளர்களை கொண்டு தொடர்ந்து செயல்பட வேண்டும்.
2. 32 மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகங்களில் உள்ள பணியிடங்கள் அனைத்தும் புதியதாக ஏற்படுத்தப்பட்ட அலுவலகங்களுக்கு மாற்றம் செய்யப்பட வேண்டும்.
3. 17 மெட்ரிக் பள்ளி ஆய்வாளர் அலுவலகங்கள், 2மாவட்ட வயதுவந்தோர் கல்வி அலுவலகங்கள் மற்றும் 1 ஆங்கிலோ இந்தியன் பள்ளிகள் ஆய்வாளர் அலுவலகம் உட்பட மொத்தம் 20 அலுவலகங்களில் கீழ்கண்டவாறு குறைந்தபட்ச எண்ணிக்கையில் ஆசிரியர் அல்லாத பணியிடங்கள் அனுமதிக்கப்படுகிறது.

| வ.எண் | அனுமதிக்கப்பட்ட பணியிடம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பள்ளி துணை ஆய்வாளர் (பட்டதாரி ஆசிரியர் பணிநிலையில்) | 01 |
| 2 | நேர்முக உதவியாளர் அமைச்சுப் பணி | 01 |
| 3 | பிரிவு கண்காணிப்பாளர் | 02 |
| 4 | இ. ப கண்காணிப்பாளர் | 02 |
| 5 | உதவியாளர் | 04 |
| 6 | இளநிலை உதவியாளர் | 04 |
| 7 | தட்டச்சர் | 01 |
| 8 | பதிவறை எழுத்தர் | 01 |
| 9 | அலுவலக உதவியாளர் | 01 |
| 10 | காவலர் | 01 |
| 11 | ஓட்டுநர் | 01 |

புதிதாக தோற்றுவிக்கப்பட்ட 52 மாவட்ட கல்வி அலுவலகங்களில் மேற்காணும் பணியிடங்களை நிரப்புவது தொடர்பாக கீழ்க்கண்டவாறு செயல்பட அனைத்து முதன்மை கல்வி அலுவலர்களுக்கும் அனுமதி வழங்கப்படுகிறது.

1. புதிதாக உருவாக்கப்பட்ட 20 (17 மெட்ரிக் பள்ளி ஆய்வாளர் அலுவலகங்கள், 2 மாவட்ட வயதுவந்தோர் கல்வி அலுவலகங்கள் மற்றும் 1 ஆங்கிலோ இந்தியன் பள்ளிகள் ஆய்வாளர் அலுவலகம் உட்பட) மாவட்ட கல்வி அலுவலர்களுக்கு ஏற்கனவே இயங்கி வந்த பழைய அலுவலகங்களில் உள்ள பணியிடங்களுடன் அலுவலகங்கள் உருவாக்கப்படுவதால், அப் பணியிடங்கள் தவிர்த்து (மேற்குறிப்பிட்ட குறைந்தபட்ச பணியிடங்கள் குறைவு படும் போது) கூடுதலாக தேவைப்படும் பணியிடங்களுக்கு மற்றும் பணியாளர்களை பணியிடத்துடன் மாறுதல் செய்ய வேண்டும். புதிதாக தோற்றுவிக்கப்பட்ட மாவட்ட கல்வி அலுவலகத்தில் நிர்ணயிக்கப்பட்ட பணியிடங்களில் காலிப்பணியிடம் ஏதுமிருப்பின் வருவாய் மாவட்டத்தில் உள்ள விருப்பமுள்ள நபர்களிடமிருந்து விருப்ப மாறுதல் விண்ணப்பம் பெற்று மாறுதல் ஆணை வழங்கலாம்.
2. வேறு வருவாய் மாவட்டத்தில் இருந்து மாறுதல் விண்ணப்பங்கள் புதியதாக தோற்றுவிக்கப்பட்ட அலுவலகங்களுக்கு பெறப்படுமாயின், அதனை தொகுத்து பட்டியலிட்டு இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)க்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அத்தகையோருக்கு இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி ) அவர்களால் மாறுதல் ஆணை வழங்கப்படும்.
3. தங்களது மாவட்டத்தில் செயல்பட்ட அலுவலகம் வேறு வருவாய் மாவட்டத்திற்கு மாற்றப்பட்டால் அப்பணியிடத்தினை மட்டுமே வேறு மாவட்டத்திற்கு அளித்தல் வேண்டும். அப்பணியிடங்களில் பணிபுரிந்த நபர்களுக்கு தங்களது வருவாய் மாவட்டத்திற்குள்ளேயே பணியாளர்களின் நலன் பாதிக்காத வகையில் அதே மாவட்டத்தில் உள்ள வேறு அலுவலகங்களுக்கு மாறுதல் வழங்கப்பட வேண்டும்.
4. ஏதேனும் ஒரு மாவட்ட கல்வி அலுவலகத்தில் நிர்ணயித்துள்ளபடி குறைந்தபட்ச பணியிடங்கள் உருவாக்க இயலாத நிலை இருப்பின், அவ்வாறு தேவைப்படும் பணியிடங்களை விவரங்களை பட்டியலிட்டு இணை

இயக்குநர் (பணியாளர் தொகுதி)க்கு அனுப்புதல் வேண்டும். புதிய பணியிடங்களை அரசிடம் கோரி பெற்று வழங்குவதற்குரிய தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்.

5. அனைத்து பணியிடங்கள் சார்ந்த விவரங்களும் அந்தந்த அலுவலக அளவை பதிவேட்டில் பதியப்பட வேண்டும்.
6. புதிய மாவட்ட கல்வி அலுவலர்களுக்கு ஒதுக்கப்பட்டு, தற்போது காலியாக உள்ள பள்ளி துணை ஆய்வாளர் பணியிடங்களை பூர்த்தி செய்வது குறித்து ஆசிரியர் பொது மாறுதல் கலந்தாய்வின் போது அறிவுரைகள் வழங்கப்படும்.

<u>முதன்மை கல்வி அலுவலகம்</u>

பார்வை (1) ல் காணும் அரசாணையில் மாவட்ட கல்வி அலுவலகங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, அவர்கள் தம் பொறுப்புக்கள் மாற்றி வடிவமைக்கப்பட்டது. அதன்பேரில் ஒவ்வொரு முதன்மை கல்வி அலுவலர்களுக்கும் கூடுதல் பணிகளும் பணி பொருட்களும் வழங்கப்பட்டுள்ளது.

இதனை நடைமுறைப் படுத்த வேண்டி ஒவ்வொரு முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கு தற்போதுள்ள பணியிடங்களுடன் கூடுதலாக கீழ்காணும் ஆசிரியர் அல்லாத பணியிடங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன.

| | | | | |
|---|---|---|---|---|
| | வருவாய் மாவட்டத்தில் உள்ள மாவட்ட கல்வி அலுவலகங்களில் எண்ணிக்கை | | | |
| 1 | மூன்று மாவட்ட கல்வி அலுவலகம் | | இருக்கை கண்காணிப்பாளர் | 01 |
| | | | உதவியாளர் | 02 |
| | | | இளநிலை உதவியாளர் | 02 |
| | | | மொத்தம் | 05 |
| | வருவாய் மாவட்டத்தில் உள்ள மாவட்ட கல்வி அலுவலகங்களில் எண்ணிக்கை | | | |
| 2 | மூன்றுக்கு மேற்பட்ட மாவட்ட கல்வி அலுவலகம் வரை | | இருக்கை கண்காணிப்பாளர் | 02 |
| | | | உதவியாளர் | 04 |
| | | | இளநிலை உதவியாளர் | 04 |
| | | | மொத்தம் | 10 |

முதன்மை கல்வி அலுவலகங்களில் கண்காணிப்பாளர் அனுமதிப்பது குறித்து அரசின் அனுமதி பெற்று உள்ளதால் அது குறித்து தனியாக ஆணை வழங்கப்படும்.

மேற்காணும் பணியிடங்களை தங்கள் மாவட்டத்தில் உள்ள வேறு பள்ளிகள் / அலுவலகங்களில் இருந்து பணியிட மாற்றம் செய்து தீர்த்துக்கொள்ள முதன்மை கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்டத்திலேயே விருப்பமுள்ளவர்கள் இருப்பின் மாறுதல் வழங்கி தனி இடத்தினை நிரப்பிடலாம்.

வட்டார கல்வி அலுவலகம்

மேற்காணும் நிர்வாக சீரமைப்பு காரணமாக ஏற்படும் பல்வேறு பணிச்சுமைகளை கருத்தில் கொண்டு ஒவ்வொரு வட்டார கல்வி அலுவலகங்களுக்கும் அதிகபட்சமாக 4 உதவியாளர் பணியிடங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன. ஏதேனும் வட்டார கல்வி அலுவலகத்திற்கு உதவியாளர் பணியிடம் குறைவு ஏற்படின், அந்நதந்த வருவாய் மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் இருந்து உதவியாளர் பணியிடங்களை, பணியிடத்துடன் வட்டார கல்வி அலுவலகத்துக்கு பகிர்ந்து அளிக்கலாம்.

மேற்கண்ட அனைத்து நிர்வாகப்பணிகளையும் மேற்கொள்வதுடன் 31/05/2018அன்று தங்கள் வருவாய் மாவட்டத்திற்குள், புதிதாக நிர்ணயிக்கப்பட்ட காலிப்பணியிடங்களை விருப்பத்தின் அடிப்படையில் மாறுதல் ஆணை வழங்கப்பட வேண்டும். 31/05/2018 அன்று மாலைக்குள் இப்பணிகளை முடித்து, இதன் மீதான முடிவான அறிக்கையினை இணை இயக்குநர் ( பணியாள்ா தொகுதி) பூர்த்தி செய்யப்படாமல் மீமுள்ள காலிப்பணியிடங்களின் விவரம், வேறு மாவட்டம் செல்ல விருப்ப மாறுதல் அளித்தவர்களின் விண்ணப்பம் ஆகியவற்றை தொகுத்து பட்டியலிட்டு அனைது முதன்மைக் கல்வி அலுவலர்களும் அனுப்பி வைத்தல் வேண்டும். இந்த நிர்வாக சீரமைப்பு மேற்கொள்வதில் எவ்வித காலதாமதமோ, சுணக்கமோ ஏற்படுதல் கூடாது எனவும் அரசுக்கு எவ்வித கூடுதல்

நிதிச்சுமை ஏற்படாவண்ணம் செயல்படுத்துமாறும் அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மேற்காண் நடைமுறைகளை மேற்கொண்டு மாவட்ட கல்வி அலுவலகங்கள் உடனடியாக முழு அளவில் செயல்படுவதை முதன்மைகக்கல்வி அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

பள்ளிக்கல்வி இயக்குநர்.